தொகுதியிலே, எப்போதுமே சுறுசுறுப்பாக இயங்கக் கூடிய நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் வீரையன் அவர்களுடைய முயற்சியையும் நான் பாராட்டாமல் இருக்க முடியாது. அவருக்கும் இந்த அவையின் சார்பிலே பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) விடுதலைப் புலிகள் நிலை பற்றி இந்தியாவில் ''நகைமுகன்'' என்பவர் பேசியதாகப் பத்திரிகையில் வந்துள்ள செய்தி குறித்து.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அடுத்து, இன்னொரு அறிவிப்பாக ஒரு செய்தி இன்றைக்கு பத்திரிகைகளிலே பரபரப்பாக வந்திருக்கின்றது. நகைமுகன் என்கின்ற ஒருவர் சொன்னதாக, அவர் டெல்லியிலே சென்று பேசியதாக அந்தச் செய்தி வந்து இருக்கிறது. அது குறித்து, பெரும் பதட்ட நிலை ஏற்படாவிட்டாலும் கூட, இன்றைய மிக முக்கியமான பத்திரிகை ''தினமணி'' பத்திரிகையில் ஒரு தலையங்கமே எழுதப்பட்டிருக்கிற காரணத்தால் நான் அதற்கு விளக்கம் அளிக்க வேண்டியவனாக இருக்கிறேன். அந்த நகைமுகன் பேசியதாக வந்துள்ள செய்தி : தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன சார்பில், நகைமுகன் என்பவர் ஒரு கூட்டத்திலே பேசினாராம் ; இந்திய ஏகாதிபத்தியத்தின் பிடியிலிருந்து சீக்கியர்கள் விடுதலை பெற விடுதலைப் புலிகளின் ஆதரவு உண்டு என்று அவர் குறிப்பிட்டாராம் ; சீக்கியர்களும், தமிழர்களும் மறவர் குலத்தவர் என்றும், இந்துக்களுடைய பாசிசத்தை எதிர்ப்பவர்கள் என்றும் அவர் பேசியதாகத் தெரிய வருகிறது, என்று வந்திருக்கிறது. அவர் பிரபாகரனுக்கு வேண்டியவரா இல்லையா என்பதெல்லாம் அல்ல பிரச்சினை. இந்திய நாட்டிற்குள்ளே இருக்கின்ற ஒற்றுமையை ஊனப்படுத்துபவராகவோ அமைதியைக் குலைப்பவராகவோ, பிரிவினையைத் தூண்டுபவராகவோ யாராக இருந்தாலும் அவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்படுவார்கள். அவர் நகைமுகனாக இருந்தாலும் சரி, கஜமுகனாக இருந்தாலும் சரி, எந்த முகனாக இருந்தாலும் அவர்கள் தண்டிக்கப்படுவார்கள். உடனடியாக இது குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தமிழகக் காவல் துறைக்கு கட்டளை இடப்பட்டிருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

8. சட்டமுன்வடிவு (ஆய்வு செய்தல்)

நிதி ஒதுக்க (எண் 2) சட்டமுன்வடிவு, 1990.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க (எண் 2 சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 12/1990) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல் ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க (எண் 2) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 12/1990) நிறைவேற்றப் பெறவேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

9. மானியக் கோரிக்கைகள், 1990–91—விவாதமும் வாக்கெடுப்பும் (தொடர்ச்சி.)

(அ) கோரிக்கை எண் 25. சின்கோனா.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண். 25—சின்கோனா என்ற தலைப்பின் கீழ் ரூ. 3,39,60,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

திரு டி. சி. விஜயேந்திரையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க் கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண். 25—சின்கோனா என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 3,39,60,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''